**உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.NO. 03/2026 in O.S. No.8/2019**

நாகேந்திரன் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

1. பாஸ்கரன்
2. ரமேஷ்
3. சதீஸ் ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது இறுதியாக இன்று(09.02.2026) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாண்டி, திரு.R.வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதிலுள்ள காலதாமதத்தினை மன்னித்து, மேற்படி ஆவணங்களை பிரதிவாதி தரப்பு 1 முதல் 5 சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த வேண்டி கட்டளை 8 விதி 1–A(3) மற்றும் சி.பி.சி. 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவுரை சுருக்கம்**

1. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் மனுதாரருக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் உரிய காலத்தில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் மனுதாரரது தரப்பு ஆவணங்களாக,

i. கடந்த 16-11-2016-ம் தேதியில் சரவணன் என்பவர், அய்யம்பாளையம் கிராம சர்வே எண் 1339/5A2 ல் 90 செண்ட் நிலத்தினையும், அய்யம்பாளையம் கிராம சர்வே எண் 1340/ 1A-ல் உள்ள 1 3/4 செண்ட் நிலத்தையும், மனுதாரர் பெயருக்கு கிரையம் எழுதிக்கொடுத்த அய்யம்பாளையம் சார்பதிவக 1962/2016 ஆம் ஆவணம்,

ii. மேற்படி சரவணன் கடந்த 26-08-1991 ஆம் தேதியில் சர்வே எண் 1339/5A2 -ல் உள்ள 90 செண்ட் நிலத்தினை ஒரு முத்துச்சாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற அய்யம்பாளையம் சார்பதிவக 721/1991 ஆவணம்,

iii. மேற்படி சரவணன் கடந்த 27-01-1997 ஆம் தேதியில் சர்வே எண் 1340/1A-ல் 1 3/4 செண்ட நிலத்தினை ஒரு மொட்டையாண்டி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற அய்யம்பாளையம் சார்பதிவக 78/1997 ஆவணம்,

iv. சர்வே எண் 1339/5A2 90 செண்ட் நிலத்திற்கான மனுதாரர் பெயரில் உள்ள பட்டா எண் 6757 -ன் கணினி பட்டா நகல்,

v. மற்றும் சர்வே எண் 1340/1A (தற்போதைய சர்வே எண் 1340/4) –ல் 1 3/4 செண்ட் நிலத்திற்கான மனுதாரர் பெயரில் உள்ள பட்டா எண் 7819–ன் கணினி பட்டா நகல் ஆகிய 5 ஆவணங்கள் ஆகும்

3. மேற்படி வழக்கில் மனுதாரரது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்த போது மேற்படி ஆவணங்களை எதிர் வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்கள் மனுதாரருடைய வீட்டில் வழக்கமாக வைத்த இடத்தில் காணக்கிடைக்காமல் போகவே, அந்த நேரத்தில் அதனை தாக்கல் செய்ய முடியவில்லை. அது வேண்டுமென்றே செய்யப்பட்டதல்ல.

4. மேலும் சமூகம் நீதிமன்றம் அனுதிக்கும்பட்சத்தில், மேற்படி சர்வே எண் 1339/5A2 நிலத்தினை கடந்த 30–07–2022 ஆம் தேதியில் பார்வையிட்ட நீதிமன்ற ஆணையர் கடந்த 23–08–2022 ஆம் தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அவருடைய அறிக்கையையும், அவருடைய வரைபடத்தினையும் மற்றும் சர்வேயர் வரைபடத்தினையும் மனுதாரரது தரப்பு நீதிமன்ற ஆவணங்களாக குறியீடு செய்ய உள்ளார் என்ற விபரத்தினை சமூகம் நீதிமன்றத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறார். எனவே, மனுதாரரது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதிலுள்ள காலதாமதத்தினை மன்னித்து மேற்படி ஆவணங்களை பிரதிவாதி தரப்பு 1 முதல் 5 சான்றாவணங்களாக ஆக ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>4). தீர்வு</u>

மனுதாரர்/பிரதிவாதியின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை ஏற்கனவே தாக்கல் செய்யாததற்கு, இம்மனுவில் சொல்லியுள்ள காரணம் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணம் தான் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மனுதாரரது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதிலுள்ள காலதாமதத்தினை மன்னித்தும், தரப்பினருக்கு அவரது ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு போதுமான நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டும் இவ்வழக்கின் இறுதியான தீர்விற்கு இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலன் கருதி சரியானது என்று இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்**, மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.10 16:16:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.